# முக்கியராணுவ அதிகாரிகள்பதவிநீக்கப்படுவர்?

[கொழும்பு)
முக்கிய இராணுவ அதிகாரிகள் சிலர் விரைவில் பதவி நீக்கப்படலாம் எனக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன,
அண்மைக் காலமாக இராணுவத்தினர் இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் நடந்து
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 28 இதழ் 283
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-11-1994

## முப்படைத் தளபதிகளை சந்திரிகா சந்திப்பார்

(கொழும்பு)
முப்படைத் தளபதிகளையும் விரைவில் ஜனாதிபதி சந்திரிகா சந்தித்து நாட்டு நிலைமை பற்றி ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
வடக்கு-கிழக்குபிரச்னை இச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் அரசு - விடுதலைபுப்லிகள் பேச்சுக்கள்
(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர், அமைச்சரவை இன்று பதவியேற்பு

(கொழும்பு)
பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அவரது அமைச்சரவையும் இன்று காலை சுபவேளையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள்.
அலரிமாளிகையில் நடைபெறும் இவ்வைபவத்தில் முத
(4-ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னை தீர்வுக்கான அரசு - புலிகள் பேச்சுக்களை ஐ. தே. க. எதிர்க்கமாட்டாது

## ரணில் கூறுகிறார்

[கொழும்பு]
வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக அரசும் விடுதலைப்புலிகளும் நடாத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஐ. தே. க. எதிர்க்கமாட்டாதென எதிர்க்கட்சி தலைவரும் ஐ.தே.க.வின் புதிய தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்க பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்

அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்: அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையி லான சமாதானப் பேச்சுக்கள் ஒளிவுமறைவின்றிப் ரங்கமாக நடைபெறும் என நாடாளுமன்றில் பிரதமர் கூறியிருப்பதால் ஐக்கிய தேசியக் கட்சி இதனை எதிர்க்கப் போகி மாட்டாது.
முன்னர் விடுதலைப்புலிகளுடனை பேச்சுவார்த்தைக்கு ஐ. தே. க. நான்கு நிபந்தனைகளை விதித்தபோது அப்போதைய எதிர்ச்கட்சி தலைவர் திருமதி சிறிமாவோ பண்டார
(4ம் பக்கம் பார்க்க)

## ★ லண்டனில் தற்கொலைப் பெண்ணின் உடற்பகுதி ஆய்வு

(கொழும்பு)
காமினி திஸநாயக்காவை கொலைசெய்தவர் எனக் கருதப்படும் பெண்ணின் உடற்பகுதிகள் தற்சமயம் பிரிட்டனில் உள்ள சட்ட மருத்துவ நிபுணர்களால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
இந்த உடற்பகுதியை லண்டனுக்கு எடுத்துச் சென்ற இலங்கை பொலிஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பெண்ணை அடையாளம் காண்பதற்காக டி. என் ஏ. பரிசோதனைகளை நடாத்தும்படி கேட்டுள்ளனர்.
குண்டை வெடிக்க வைப்பதற்கு முன்னர் இப்பெண் 'சயனைட்' உட்கொண்டாரா என்பதை அறிந்து கொள்வதற்கும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளும்படி அவர்கள் கேட்டுள்ளனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைத் தீர்வை அரசு கூறவேண்டும்

(லண்டன்)
இலங்கை இனப் பிரச்னைக்கு அரசு எவ்வாறான தீர்வை முன்வைக்கப்போகிறது என்பதை அறிவிக்கவேண்டும் என லண்டனில் உள்ள ராம் மாணிக்கலிங்கம் என்பவர், பி. பி. ஸி. சந்தேசியாவுக்குத் தெரிவித்துள்ளாரர்.
அவர் மேலும் கூறுகையில்: பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தமிழர்பிரச்னைக்குஎன்ன விதத் தீர்வைக் கொடுக்கப் போகின்றது? என்ன மாதிரி அதிகாரங்களை வழங்க உள்ளது? என்ன முறையில் சமாதானத்தை எட்டப்போகிறது என்று முதலில் வெளிபடுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சுதந்திரமான முறையில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது

### சர்வதேச அவதானிகள் அறிக்கை

(கொழும்பு)
யாழ்ப்பாண மாவட்டத்தில் ம-சி ஒரு சில குறைபாடுகள் நிலவியபோதிலும்நாட்டின்ஏனைய பகுதிகள் அனைத்திலும் ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட்டுள்ளது ஏன்று சர்வதேச அவதானிகள் குழுவினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்,
நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் பற்றிய தமது கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்காக நேற்று நடாத்தியசெய்தி
(4ம் பக்கம் பார்க்க)

## லேக்கவுஸ் பத்திரிகையாளர் அரசு மீது கடும் சீற்றம்

(கொழும்பு)
அரசின் கட்டுப்பாட்டிலுள்ள 'லேக்கவுஸ்' பத்திரிகை நிறுவன இயக்குனர்களும், பத்திரிகையாளர்களும் அரசின் நடவடிக்கைகள் குறித்து பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.
ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தேர்தல் பிரசார காலங்களில் திருமதி சந்திரிகாவின் செயலர் திரு. பாலபத்தபெண்டி உட்பட முக்கியஸ்தர்
(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியலில் சோதிட ஆதிக்கம்

(கொழும்பு)
இலங்கை அரசியலில் சோதிடத்தின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.
அரசியல் வாதிகளில் பெரும்பாலானோர் கிரகங்கள் என்ன சொல்கின்றன என்பதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். சோதிடர்களை கலந்தாலோசிக்காது முக்கிய
(4-ம் பக்கம் பார்க்க)

## இரவு 9 மணி வரை கடைகள் திறக்கலாம்

(யாழ்ப்பாணம்)
வர்த்தகர்கள் தாம் விரும்பும் பட்சத்தில் தமது வர்த்தக நிலையங்களை சனி, ஞாயிறு பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவு 9-00 மணிவரை பொது மக்களது நலன்கருதி திறந்து வியாபாரம் செய்யுமாறு விடுதலைப்புலிகள் யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.
இந்நேர நீடிப்பானது கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களது நல உரிமை
[4ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு நகரின் பாதுகாப்பு தொடர்ந்து பலமான நிலையில்

(கொழும்பு[
கொழும்பிலும் அதன்சுற்றுப் புறத்திலும் ஜனாதிபதி தேர்தலையொட்டி போடப்பட்ட பாதுகாப்பு தளர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
தலைநகரில் பாதுகாப்புக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருப்பதால் முக்கிய கேந்திர நிலையங்களிலும் முக்கிய சந்திகளிலும் படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கையை கடுமைப்படுத்தியுள்ளனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**மரக்கன்றுகள் விற்பனைக்கு**

நல்லின தேசிக் கன்றும் தோடங்கன்றும் விற்பனைக்குண்டு விலை 10/- மட்டும். Taste Lim- Industries PVT Ltd 14 Seenier La-e Jaffna. (ஏ-4491)

**உடன் விற்பனைக்கு உண்டு**

டச்சு ரோட் 1-ம் ஒழுங்கை சாவகச்சேரி - வடக்கு சாவகச்சேரி என்னும் இடத்தில் 5 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன், மா, தென்னை மரங்களுடன் விற்பனைக்குண்டு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:. S. கந்தசாமி, சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி-1310)


**இன்று**

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 6-00 மணிக்கு பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்களினால் நடாத்தப்படவுள்ளது. - வா

**மாணவர் கற்க மின் வசதி**

(கொழும்புத்துறை)

யாழ். வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையின் மாணவர்கள் நலன் கருதி இரவு நேரத்தில் கல்வி கற்க உதவும் நன்நோக்குடன் ஜெனரேற்றர் மூலம் மின் சாரவசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

### தை - 1994

நல்லூர்
யா/ந
17 329 449 3263
4322 4747 4944 5052
5056 5751

யாழ்ப்பாணம்
யா/யா
05 208 335 1941
2567 2803 2946 3509
4959

கோப்பாய்
யா/கோ
347 585 799 943
995 1320 5279 5784

உடுவில்
யா/உ
321 421 766 2187
2576

மானிப்பாய்
யா/மா
179 222 228 2131
3219 3330

தெல்லிப்பழை
யா/தெ
480 531 725 2447
2910 3042 3956 4215

சங்கானை
யா/ச
449 1409 2461 3145
3181 3861 3893 4210
4570

காரைநகர்
யா/கா
614 640

வேலணை
யா வே
69 91 182 763 800
874

கரவெட்டி
யா/க
190 307 429 715
910 2476 3127 3224
3339 4075

பருத்தித்துறை
யா/ப
122 735 962 1105
1126 2108 2423 2523

வடமராட்சி கிழக்கு
யா வ கி
681 820

சாவகச்சேரி
யா சா
48 124 138 205 413
648 758 923 3565
4612 4698 4775 5138

பச்சிலைப்பள்ளி
கி/ப
149

வெளியகல்வு
யா/வெ
141 216 639

### மாசி - 1994

நல்லூர்
யா ந
239 344 526 634
2716 2744 4084 4238
4324 4587

யாழ்ப்பாணம்
யா யா
10 67 98 426 504
761 3194 3624 4367

கோப்பாய்
யா/கோ
324 734 778 2330
3243 4276 6193 6347

உடுவில்
யா உ
53 313 603 1365
2783

மானிப்பாய்
யா/மா
61 2242 2410 3075
3264 3684

தெல்லிப்பளை
யா/தெ
160 383 726 787 812
1142 1748 4216

சங்கானை
யா/ச
50 204 224 869 883
959 1354 3064 4048

வேலணை
யா/வே
48 591 622 802 1761
2865

காரைநகர்
யா/கா 127 390

கரவெட்டி
யா க
212 247 474 712 753
1814 2691 3210 3237
3342

பருத்தித்துறை
யா பரு
46 290 695 847 1407
1743 2342 3918

வடமராட்சி கிழக்கு
யா வ கி
533 877

சாவகச்சேரி
யா/சா
361 386 678 798
954 1052 1247 1903
1985 3230 3356 5257
5686

பச்சிலைப்பள்ளி
கி ப 136

வெளியகல்வு
யா/வெ
233 384 1313

### பங்குனி — 1994

நல்லூர்
யா/ந
318 787 1074 2071
3210 3718 3764 4685
4901 5075

யாழ்ப்பாணம்
யா/யா
132 332 342 404 542
595 2329 3161 4292

கோப்பாய்
யா/கோ
37 839 948 1069
1133 1318 2265 5351

உடுவில்
யா/உ
623 652 787
916 1832

மானிப்பாய்
யா/மா
23 833 882
1319 3833 3837

தெல்லிப்பளை
யா தெ
474 937 2343
2672 3135 3175
3719 3745

சங்கானை
யா/ச
08 290 311
422 433 513 2812
3123 3213

காரைநகர்
யா/கா
272 292

வேலணை
யா/வே
584 916 1378
1513 2311

கரவெட்டி
யா/க
145 172 305
538 553 624
2013 2791 3118
4305

பருத்தித்துறை
யா/பரு
515 534 721
759 1022 1325
2513 3402

வடமராட்சி கிழக்கு
யா/வ. கி.
353 572

சாவகச்சேரி
யா/சா
214 225 233
497 818 926
1831 2387 2690
3160 329[illegible] [illegible]286
[illegible]

(3ம் பக்கம் பார்க்க)


# ஃ கற்பகச் சோலை

## பனை நடுகைத் திட்டம்

5 வருடங்களில் 50 இலட்சம் பனைமரங்களை உருவாக்க ஆண்டுதோறும் 15 இலட்சம் பனை விதை நடுகையை மேற்கொள்ளும் இப்பணியில் நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம்.

"2000 ஆண்டளவில்




2 கோடி பனை மரங்கள்"

**பனை அபிவிருத்திச் சபை**
தேசியவீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு;
பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
தமிழீழம்.

★ சந்ததிக்கான சேவை கற்பகச் சோலை ★

(சி.1304)

மணிவாக்கு

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் எவ்வளவு அவசியமோ அதுபோல நமக்குத் தாய் மொழி அவசியம்.

— காந்தியடிகள்

# நமது நோக்கு

## சில்லறைப் பிரச்னை!

மக்கள் பல பாரிய பிரச்னைகளில் மூழ்கியிருக்கும்போது சில 'சில்லறைப்' பிரச்னைகள் பற்றிச் சிந்திக்கவோ, அவற்றிற்குத் தீர்வுகாண முடியாமலோ இருக்கிறார்கள்!

பண்டமாற்றுச் செய்ய வசதியாக அரசு நாணயத்தையும் பணநோட்டுக்களையும் வெளியிடுகிறது. அவை சட்டப்படி செல்லுபடியாகும் (Legal Tender) என்ற காரணத்தால், மக்கள் அவற்றை எவ்வித பயமோ, தயக்கமோ இன்றி அன்றாடக் கருமங்களுக்கும் பயன்படுத்துகிறார்கள்.

அரசு வெளியிட்ட பணத்தை ஏற்க மறுப்பது சட்டப்படி குற்றமாகும்.

ஆனால் இன்று நாட்டிலே பணம் படுத்தும் பாடு, அதனைச் சில்லறையாக மாற்ற அலையும் காட்சி, கிழிந்த அல்லது சற்றுச் சிதைந்த நோட்டுகள் 'எப்படியோ' கைக்கு வந்ததும், அவற்றை மீண்டும் சுற்றோட்டத்திற்குத் தள்ளிவிட எடுக்கும் முயற்சி, நல்ல அவலச் சுவையான காட்சிகளாகும்.

பஸ் வண்டிகளிலும், கடைகளிலும் இதனால் ஏற்படும் வாக்குவாதமும், முகம் சுளிப்புகளும், முனகல்களும் வேதனை தரும் நிகழ்ச்சிகளாகும்.

முன்பெல்லாம்— சிறிய அழகான பணப்பைகள் (Purse) சட்டைப் பைக்குள் இருந்தன. பண நோட்டுகளும் கிழியாமல் அதற்குள் பக்குவமாகப் பதுங்கி இருந்தன.

ஆனால்- சொல்லாமற் செய்யும் பெரியோர்களான பையிற் கைவைப்போரின் (Pick Pockets) செயல்களால், பணப்பைகள் பாவிக்கும் பழக்கம் அருகிவிட்டது.

இன்று—பண நோட்டுகளைக் கொண்டு திரியும்போது, மடித்து, முடிஞ்சு, ஒழித்துக் கொண்டு போவதால், அவை நசிந்து நலிந்து கசங்கிக் கிழிய வழி ஏற்படுகின்றது.

இப்படிச் சிதைந்த நோட்டுக்களை மாற்றுவது எப்படி? ஆயிரம், ஐநூறு ரூபா நோட்டுகளுக்குச் சில்லறை பெறுவது எப்படி? மக்கள் வழி தெரியாது தவிக்கிறார்கள்.

இன்று-அரசின் 'நாயணயமே' கேள்விக்குரியதாகி வரும வேளையில், அது வெளியிடும் பணநோட்டுகளைப் புதுப்பிக்கத் தயங்குவது காலத்தின் கோலமே.

மத்திய வங்கி இதற்கான வழிவகைகளை அறிவித்து மக்களின் நாளாந்த வேதனையைப் போக்க முன்வர வேண்டும்!

# மருத்துவ உலகை வியக்க வைக்கும் நீரழிவு நோய்

இலங்கையில் நகரப் பகுதிகளில் வசிப்போரில் ஐந்து முதல் ஏழு சதவீதத்தினரும் கிராமப் பகுதியில் வசிப்போரில் இரண்டு முதல் நான்கு சதவீதத்தினரும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

நீரிழிவு நோய் ஒரு மனிதனை ஆயுட்காலம் வரை பாதிக்கும் ஒரு நோயாகும். ஆனால் அந்த நோய் ஒரு மனிதனை பாதிக்கக்கூடியதற்கான காரணங்கள் மனித சமுதாயத்துக்கு ஒரு புதிராகவே உள்ளது.

கோடிக்கணக்கான மக்கள் இன்று உலகில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர், மனிதனின் இரத்தத்தில் காணப்படும் வழமையான சீனி அளவு அதிகரிக்கும் போது நீரிழிவு நோய் காணப்படுகிறது,

உடம்பிலுள்ள சீனியின் அளவு இன்சுலின் என்ற ஹோர்மோன் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த ஹோர்மோன் குறைவாகவே கரணப்படுகிறது.

> இன்று உலக நீரழிவு நோய் தினமாகும். அதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

நீரிழிவு நோயைப் பூரணமாக குணப்படுத்திவிட முடியாது. ஆனால் அந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கமுடியும். இதன் மூலமாகவே நீரிழிவு நோயாளர்களுக்குச் சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

சீனித்தன்மை அற்ற உணவுகளை வழங்குவதன் மூலமும், உடம்பில் சீனித்தன்மையைக் குறைப்பதற்கான மருந்து வகைகளைக் கொடுப்பதன் மூலமாகவும் உடம்பில் குறைவாகக் காணப்படும் இன்சுலினை நிவர்த்தி செய்வதன் மூலமாகவும் இந்த நோயை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

ஒரு நீரிழிவு நோயாளருக்கு கொடுக்கப்படும் உணவின் அளவு அவரது எடையின் அளவைப் பொறுத்ததாகவே அமையும். கொழுப்புச் சத்துக் குறைவான உணவு வகைகள், மரக்கறி வகைகள் போன்றவற்றையும் வழங்கலாம்.

நீரிழிவு நோயாளர்கள் சீனியை முற்றாகவே கைவிட வேண்டும். அதேபோல் தேன் கருப்பட்டிவகைகளையும் உட்கொள்ளக்கூடாது, மாச்சத்து கலந்த உணவுவகைகளான உருளைக்கிழங்கு, அரிசி, பாண் ஆகியவற்றை உட்கொள்ளலாம். ஆனால் அவற்றினை மிகவும் குறைவாகவே உட்கொள்ள வேண்டும். இறைச்சிவகைகள் உட்கொள்வதைக் குறைக்கவேண்டும். புகைத்தலையும், மதுபான வகைகளையும் கூடக் குறைக்க வேண்டும்.

இறைச்சி வகைகளுள் மாட்டிறைச்சியை வாரம் ஒரு முறை உட்கொள்ளமுடியும், மீன், கோழி இறைச்சியையும் அடிக்கடி உண்ணலாம். ஆனால் இவற்றையும் பொரித்து உண்பது நல்லது,

நீழிரிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது பாதங்களைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பாதங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் பாதணிகளை அணியவும் வேண்டும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட நரம்புகள் உணர்வுகளை இழந்து வருகின்றன. இதனால் பாதங்கள் பாதுகாக்கப்படாதவிடத்து அவற்றை முட்கள் கற்கள் போன்றவை பாதித்து காயங்களை ஏற்படுத்த முடியும். நீரிழிவு நோயாளர்களுக்கு காயங்கள் ஏற்படுமிடத்து அவற்றில் பக்ரீயாவின் தாக்கம் அதிகமாகவே இருக்கும். உடம்பில் காணப்படும் அதிகளவு சீனித் தன்மையே அதற்குக் காரணமாமாகும். இதனால் இந்தக்காயங்கள் குணமாவது ஒரு முடியாத காரணமாகி விடுகின்றது. இப்படியான சந்தர்ப்களில் காயம் ஏற்பட காலை வெட்டி ஒடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால் நோயாளர் தனது பாதங்களை மிகவும் அவதானத்துடன் பாதுகாக்க வேண்டும். செருப்புகளை மாத்திரம் அணிந்து பாதங்களை பாதுகாப்பது கடினம். எனவே ஒரு நோயாளர் அவசியம் தனது பாதங்களைப் பாதுகாக்க நல்ல பாதணிகளையே அணியவேண்டும்.

நீரிழிவு நோய் இந்த உலகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தோன்றிய ஒரு நோயாகும். ஒரு மனிதன் ஆயுட்காலத்தையே பீடித்திருக்கும். இந்நோய் அவனை உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்புக்குள்ளாக்கக்கூடியது.

இலங்கையைப் பொறுத்த வரையில் இந்நோய் இன்னும் 10 வருட காலத்துக்குள் எமது சனத்தொகையின் 8 முதல 10 சத வீதத்தினரை பாதித்துவிடும் என எதிர் பார்க்கப்படுகிறது. -இ

## பலதும் பத்தும்

### தேள்

எமது நாடு வெப்ப வலைய நாடு. எனவே... தேளின் இனங்களும் அதிகம்.

செந்தேள் வயல் தேள், மரத்தேள், கருந்தேள் எனப் பல வகை உண்டு இதில் கருந்தேள் அதிக விஷமுடையது!

வீடுகளில் வசிக்கும் தேள்களில் சிவப்பட்ட தேளின் விஷம் அதிக வீரியமுடையதாம். கூரையிலும், செங்கல் மத்தியிலும் உற்பத்தியாகும் தேளுக்கும் விஷமுண்டாம்!

மரத்தேள் எந்தெந்த மரத்தில் வசிக்கிறதோ அந்தந்த மர நிறமுடையதாக இருக்கும். இதுவும் விஷமுடையது.

தேள் கொட்டியவுடன் அந்த இடத்தில் நிற்காது இடம் மாறிவிடும். சில தேகவாசிகளுக்கு விஷம் அதிக விரைவாக ஏறிவிடும். உங்களில் யாருக்காவது ராகுதிசை நடக்கிறதா? விஷ, ஜெந்துக்கள் பற்றி விழிப்பாயிருங்கள்?

— மயூரன்

## இராசி பலன்

14 - 11 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-28)

துவாதசி முழுவதும்: உத்தரட்டாதி காலை 7-36 வரை. சித்தயோகம் இராகுகாலம் காலை 7-37 முதல் 9-07 வரை. சுபவேளை நண்பகல் 12.07 முதல் 1 37 வரை.

மேடம்: சுற்றத்தவர் கவலை தொழில் பதற்றம், அலைச்சல்.

இடபம்: சயன சுகம், புத்திரர் பெருமை, பணவரவு.

மிதுனம்: தாமத உதவி, பெண் அறிவுரை, தியானம்.

கடகம்: பரிதவிப்பு, கணவன் கவலை, மறதி

சிங்கம்: எதிர்பாராத துன்பம், உடல் அசதி, ஏமாற்றம்

கன்னி: மனைச் சிறப்பு, தெய்வீகச் செலவு, சகோதர பாசம்

துலாம்: நோய் தணியும், தொழில் லாபம், மனநிறைவு

விருச்சிகம்: சொற்போர், குடும்ப விரிசல், கோப வார்த்தை

தனுசு: கைப்பொருள் இழப்பு, பகைமை உணர்வு, விரோதம்

மகரம்: பிரிந்து கூடுதல், பணப்புழக்கம், விருந்துண்ணல்

கும்பம்: ஒதுக்கப்படல், தாயார் கண்டனம், மனப் பயம்

மீனம்: தொழில் பதவி, கடித நன்மை. தற்பெருமை

— ஜோஸ்யர்

## தமிழீழ மீட்பு நிதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பச்சிலைப்பள்ளி
கி/ப.
96 482

வெளியகல்வு
யா/வெ
929 1130 1550

சித்திரை – 1994

நல்லூர்
யா/ந
48 72 196 230 472
1928 2390 3582 3934
4551

யாழ்ப்பாணம்
யா/யா
146 532 992 2639
3006 3386 3597 4032
4033

கோப்பாய்
யா/கோ
142 258 505 581 615
1227 1253 2451

உடுவில்
யா/உ
119 141 439 1102
1188

மானிப்பாய்
யா/மா
193 398 2137 3053
3120 3729

தெல்லிப்பளை
யா/தெ
113 597 730 892
1842 2813 3322 3378

சங்கானை
யா/ச
174 253 462 480 938
1135 1195 1924 1942

காரைநகர்
யா/கா
352 419

வேலணை
யா/வே
109 284 291 1386
1540 1869

கரவெட்டி
யா/க
31 63 1?3 341 2244
2748 2871 3544 3774
4216

பருத்தித்துறை
யா/பரு
121 221 554 616
2068 2120 3331 3508

வடமராட்சி கிழக்கு
யா/வ. கி
113 153

சாவகச்சேரி
யா சா
13 192 284 612 826
1235 1263 2296 2452
3926 4984 5448 5826

பச்சிலைப்பள்ளி
கி/ப
23

வெளியகல்வு
யா/வெ
699 842 871

(தொடரும்)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-11-14 திங்கள்

இரவு

08-01 தளிர்கள். சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 தாயகப் பாடல்கள்
08-30 செய்திகள்
08-40 தாசனம் - தமிழீழத்தின் மூத்த வயலின் இசைக் கலைஞர் திரு, சிவானந்தக் குருக்கள் சர்வேஸ்வர சர்மா அவர்களுடனான செவ்வி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1994–11–15 செவ்வாய்

காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகை செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## பாணுக்குள் அட்டை

(யாழ்ப்பணம்)

பாண் ஒன்றினுள் அட்டையின் ஒரு பகுதி ஒட்டியிருக்கக் காணப்பட்டது.

கோண்டாவில் பகுதியில் உள்ள கடையொன்றில் நேற்றுக்காலை பாண் வாங்கிய ஒருவர் பாணை வீட்டில் துண்டு துண்டாக வெட்டிய போதே அட்டையின் ஒரு பகுதி பாண் துண்டுக்குள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

வெட்டிய பாண் துண்டுடன் யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்திடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வா)

## மாவீரர் நாள் வணிகர் கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளைச் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மேற்கொண்டு வருகிறது.

இம்மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 27 ம் திகதி வரை ஏழு நாட்கள் கடந்த வருடங்களைப்போல இவ்வருடமும் மாவீரர் தினத்தைச் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக யாழ். நகர் எங்கும் மாவீரர் நாள் சுலோகங்கள் எழுதப்பட்ட பெரிய அளவிலான பதாகைகள் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினரால் வீதிகளுக்குக் குறுக்காக தொங்கவிடப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்நாட்களில் வீதிகள், பொது இடங்கள் சிரமதானப் பணிகள் மூலம் துப்பரவுசெய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறறு, அத்துடன் மாவீரர் நாளைச் சித்தரிக்கும் வகையில் முக்கிய சந்திகளில் பலவகையான

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழீழ வளத்தின் தனித்துவக் குறியீடு பனை

# கிழக்கில் கடும் வெள்ளத்தால் 30,000 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, திருக்கோவில் போன்ற பகுதிகளில் பெருமளவு அகதிகள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மூதூரில் 10 ஆயிரம் குடும்பங்களும், திருமலையில் 1750 குடும்பங்களும், தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர். அம்பாறையில் 25 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அக்கரைப்பற்றுபொத்துவில் வீதி போக்கு வரத்திற்கு முற்ருக துண்டிக்கப்பட்டுள்ளது, பொத்துவில்-லகுகலை வீதியும் முற்ருக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது மாவடிப்பள்ளி தாம்போதி நீரில் மூழ்கியுள்ளதால் கல்முனை அம்பாறை வீதி போக்கு வரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திற்கு 10 லட்ச ரூபாவும், திருமலை மாவட்டத்துக்கு 5 லட்ச ரூபாவும் வெள்ள நிவாரணமாக சமூகசேவைகள் திணைக்களத்திஞல் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மட்டு மாவட்டத்தின் நாவற்குடா மஞ்சந்தொடுவாய் ஆகிய பகுதிகளும் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளது. (க-சி)

# பி.பி.ஸி. பாணிக்கு ரூபவாஹினி மாறுகிறது!

(கொழும்பு)

ரூபவாஹினி தற்போது பி.பி.ஸி. பாணிக்கு மாறிவருவதாகப் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

ரூபவாஹினியின் பணிப்பாளர் திரு. வசந்தராஜா முன்னர் பி, பி. ஸி. சிங்களச் சேவைப் பொறுப்பாளராக இருந்தபோது எப்படிப் பேட்டிகள், விமர்சனங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றதோ, அதே போன்று தற்போது பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவாக ரூபவாஹினி நிகழ்ச்சிகள் அமைந்துள்ளனவாம்.

ஜனதிபதித் தேர்தலில் ரூபவாஹினி வெளிப்படையாகவே சந்திரிகாவுக்கு ஆதரவாகப் பிரசார வேலைகளில் இறங்கியிருந்ததாகப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியதும் தெரிந்ததே. -சி

# சில இடங்களில் மட்டும் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

குளியாப்பிட்டி, சிலாபம் ஆகிய பகுதிகளில் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளிலும், பன்வில, வத்தேகம, பேருவலை பொலிஸ் பிரிவுகளிலும் நேற்று மாலை 6-00 மணி தொடக்கம் இன்று அதிகாலை 4-00 மணி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

குளியாப்பிட்டியில் அண்மையில் ஏற்பட்ட வன்செயலினுல் 7 வீடுகள் சேதமடைந்ததாகவும், பொதுசன ஐக்கிய முன்னணியினரே இவ்வன்செயலில் ஈடுபட்டதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-சி

மாவீரர் நாள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகளைக் கொண்டவளைவுகளும் கட்டப்படுவதற்கான நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ், நகரில் உள்ள பல பொது அமைப்புகளால் இம் மாவீ ர் நாட்களை நினைவகூருமுகமாக பல இடங்களிலும் மரநடுகையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கோள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(162)

## நாடாளுமன்று இன்று கூடும்

(கொழும்பு)

சில அவசர நடவடிக்கைகளுக்காக இன்று மாலை நாடாளுமன்றம் கூடவிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-சி)

முப்படைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் யுத்த நிறுத்தம் போக்குவரத்து பாதைதிறப்பு பற்றியும் ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி சந்திரிகா பிரதமராக இருந்தபோது இராணுவத்தினர் பற்றி பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் மிகக்கடுமையாக அவர்களை சாடியதால் அரசுக்கும் படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டதும் தெரிந்ததே. -சி

முக்கிய ராணுவ

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ளும் முறை அரசுக்கு பெரும் நெருக்கடியை கொடுத்திருக்கும் இந்நிலையில் தற்போது அவர்களில் சிலர் பதவி நீக்கப்படலாமெனக் கூறப்படுகிறது.

ஜனதிபதி சந்திரிகா தற்போது முப்படைகளிற்கும் தலைவராக இருப்பதால் பாதுகாப்பு கட்டமைப்பில் அவர் பாரிய மாற்றங்களை விரைவில் கொண்டுவருவார், இதில் ஒரு கட்டமாகவே சில இராணுவ அதிகாரிகள் நீக்கப்படலாமெனக் கூறப்படுகிறது.

எனினும் இந்த விடயத்தில் ஜனதிபதி சந்திரிகா மிகக் கவனத்துடன் தீர்க்கமான முடிவை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. [சி[

# ரோகண பெயரில் நம்பிக்கை நிதியம்

(கொழும்பு)

ஜே. வி. பி யின் முன்னுள் தலைவர் ரோகண விஜேவீராவின் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி பி.யை உருவாக்கிய ரோஹன் விஜேவீராவின் 5வது சிரார்த்த தினத்தை குறிக்கும் விதத்தில இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் படுகொலைகளினுல் உயிரிழந்தவர்களின் பிள்ளைகளுக்கு, கல்வி வசதிகளையும் புலமைப் பரிசில்களையும் வழங்குதல், போன்றவற்றுக்காகவே இந்தப் புலமைப் பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ம-சி)

லேக்கவுஸ்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

கள் பலர் பத்திரிகைச் செய்தி வெளியிடுதல கட்டுரை வெளியிடுதல் என்பன தொடர்பாக பலத்த கெடுபிடிகளை மேற்கொண்டிருந்தனராம்.

காமினி கொலை தொடர்பாக 'டெய்லி நியூஸ்' பத்திரிகையும் 'தினமின' பத்திரிகையும் அச்சடித்த பெருமளவு பிரதிகளை அரசு தரப்பினர் கைப்பற்றி எரித்ததுடன் அந்தச் செய்திகளை வெளியிடதடையும்விதித்து வேறுசெய்திகளை போடவைத்தனராம்.

இவ்வாறான பல செயல்கள், கெடுபிடிகளையடுத்து லேக்கவுஸ் பத்திரிகையான 'ஒப்சேவர்' பத்திரிகை ஆசிரியர் ராஜினுமா செய்ய முனைந்ததாகவும இதனை அரசு தரப்பினர் தடுத்து அவரை ஒருவாறு சமாதானப் படுத்தியுமுள்ளனர்.

இதேவேளை லேக்கவுஸ் பத்திரிகை நிறுவன இயக்குனர் சபை பத்திரிகையில் வெளியார் தலையீடு குறித்து திருமதி சந்திரிகாவை சந்தித்து தமது ஆட்சேபத்தை தெரிவித்ததுடன் தாங்கள் ராஜினுமா செய்யப்போவதாகவும் கூறியிருந்தனர். இதனை திருமதி சந்திரிகா பின்னர் ஒருவாறு சமாளித்துவிட்டாராம் -சி

சுதந்திரமான

[1ம் பக்கத் தொடர்ச்சி[

நிருபர்கள் மாநாட்டிலேயே அவதானிகள் குழுவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது பற்றி சர்வதேச அவதானிகள் குழுவினர் தலைவர் எரிக்கொன்சால்வஸ் கருத்துத் தெரிவிக்கையில்; ஜனநாயக அமைப்பொன்றை பாதுகாப்பதில், மக்களும் அரசாங்கமும் அரசியல் கட்சிகளும், தேர்தல் ஆணையாளரும் காட்டிய ஆர்வம் எம்மை வெகுவாக கவர்ந்துள்ளது.

ஜனதிபதித்தேர்தல்அமைதியாகவும் சுதந்திரமாகவும், நடத்தப்பட்டு வாக்களிப்பு நிலையங்களில் எவ்வித பிரச்னையும் இருந்ததாகத் தென்படவில்லை. சுதந்திரமாக வாக்களிப்பதில் இருந்து எவரும் பலவந்தமாகத் தடுக்கப்படவில்லை. இந்த பொதுவான நன்மைக்கு விதிவிலக்காக ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றபோதும், தேர்தலுக்கு அதனுல் பாதிப்பு ஏற்படவில்லை.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருக்கும் பகுதிகளில் தேர்தலை நடாத்துவதால் பல எதிர்மாறான விளைவுகள் ஏற்படும். அப்பகுதியில் மிகக்குறைந்த தளவு வாக்குகள் செலுத்தப்படுவதால் உண்மையான பிரதிநிதித்துவத்தைப் பெற முடியாது. முறைகேடுகளுக்கு இதனுல் வசதி ஏற்படுகின்றது வாக்களிக்க முடியாதவர்கள் மத்தியில் அதிருப்தி உண்டாகிறது.

சுவரொட்டி சம்பந்தமான தேர்தல் சட்டம் தொடர்ந்து மீறப்படுகின்றது. இந்தச் சட்டத்தை கண்டிப்பாகஅமுல் செய்யும் வழிகள்பற்றி ஆராயப்படவேண்டும். வானொலி, தொலைக்காட்சி சாதனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு, பரிகாரம் காணப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையாளர் வானொலி, தொலைக்காட்சி, நேர ஒதுக்கீடுகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதின் மூலம் இதனைச்செய்யலாம். அரசாங்கப பத்திரிகைகள் தவருனவழியில் பயன்படுத்தப்படும் பிரச்னை, அரசியல் கட்சிகளில் அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றால் ஆராயப்பட்டு தீர்வுகாணப்படலாம் என்றும் தெரிவித்தார்.

சார்க் நாடுகளைச் சேர்ந்த 18 பிரதிநிதிகளும், சர்வதேச நியாயவாதிகள் ஆணைக்குழுவைச்சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளும், அவதானிகள் குழுவில் இடம் பெற்றனர். ம-சி

அரசு—புலிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி!

நாயக்கா உட்பட எதிர்க்கட்சியினர் அதனை ஏற்றுக்கொண்டிருந்தனர். தற்போது பொ. ச. மு. அரசு புலிகளுடன் பேச்சுக்களை நடாத்துகிறது இதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டோம்.

இந்த பேச்சுக்கள் ஆரம்பமானபோது நாடாளுமன்றில் எதிர்க்கட்சி தலைவராக திரு. காமினி திஸநாயக்கா இருந்தார். எனினும் அரசு சமாதானப் பேச்சுக்கள் குறித்த விபரம் எதனையும் நாடாளுமன்றில் தெரிவிக்கவில்லை. அரசு இதுபற்றி தெரிவித்தால் அது குறித்து, கட்சித் தலைவர்கள், என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஆராய்வர். இதுபற்றி எதுவும் எமக்கு தெரிவிக்கப்படாத நிலையில் நாம் ஏன் இதனை எதிர்க்க வேண்டும்.

காமினி கொலையில் புலிகளுக்குத் தொடர்பு இருக்கிறதா? என்று கேட்டபோது, காமினி உட்படப் பலர் கொலையுண்ட சம்பவத்திற்குத் தற்கொலைப் படைத் தாக்குதலே காரணம் எனவும், இதில் புலிகளே சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் பாதுகாப்புப் படையினர் எமக்குத் தெரிவித்னர் எனவும் கூறினுர். -சி

கச்சதீவு விவகாரம்;

# இலங்கையை இந்தியா வற்புறுத்த வேண்டும்

(சென்னை)

கச்சதிவு தொடர்பாக இந்திய-இலங்கை அரசுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தைச் சரிவர அமுல் செய்யும்படி, இலங்கைஅரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச் செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவது குறித்தும் அவ்வறிக்கையில் அவர் வருத்தம் தெரிவித்துள்ளார். க-சி

பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் அவரைத் தொடர்ந்து ஏனைய அமைச்சர்களும் ஜனதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்வர்.

புதிய ஜனதிபதியாக திருமதி சந்திரிக்கா பதவியேற்றதையடுத்து இலங்கை அரசியல் யாப்பு விதிகளுக்கமைய இவ்அமைச்சரவை கலைக்கப்பட்டதனையடுத்து புதிய அமைச்சரவை பதவியேற்பு வைபவம் இன்று நடைபெறுகிறது.

எனினும் அமைச்சரவையில் சிறுமாற்றங்களை தவிர வேறு எதுவும் ஏற்படுத்தப்படவில்லையென்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-சி)

லண்டனில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துண்டிக்கப்பட்ட தலையும் ஒரு கையின் துண்டுகளும கால் ஒன்றுமே லண்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட பகுதிகளாகும். (சி)

கொழும்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காமினியின் கொலையை அடுத்துகொழும்பில்தற்போது விசேட பாதுகாப்பு திட்டம் அமைக்கப்பட்டுள்துதாகவும் இதற்காக வடபகுதியிலிருந்து இராணுவ பொறியியலாளர் பிரிவு கொழும்ப சென்றுள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பில் தமிழர்வாழும் பகுதிகள் அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன. -சி

இரவு 9 மணி

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

களைப் பாதிக்காதவாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஊழியர்கள் தாமாக விரும்பினுல் மட்டுமே, மேலதிக நேரம் (நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்களுக்த மேல்] வேலை செய்யலாம். தினவரவு ஏட்டில் தெளிவாக கடமைக்கு வந்து செல்லும் நேரம் குறிக்கப்படுதல் வேண்டும். மேலதிக வேலை நேரப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, மேலதிக நேர வேலைக்கான ஊதியம், அந்தந்த மாத சம்பளக் கொடுப்பனவுகளுடன் சம்பளப்பட்டியலில் காட்டப்பட்டு வழங்கப்படல் வேண்டும்

பொதுமக்களுக்கான அன்ருட பாவனைப் பொருட்கள் தடையின்றி விரைவாக விநியோகிக்கப்படுவதற்கும், வர்த்தகர்களது ஊழியர்களது நலன்கருதியும் மேற்கூறிய நடைமுறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும்.

இந்நடைமுறை நாளை 15 ம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் சம்பவங்கள் எதுவும் நடைபெறுவதில்லை.

எனினும் சோதிடர்களின் கணிப்பு முழுவதும் சரியெனக் கூறிவிட முடியாது. முன்னுள் ஜனதிபதி டி. பி. விஜயதுங்க பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு சோதிடம் பார்த்து அதனபடி ஆறு மாதங்களுக்கு முன்பே தேர்தலை நடாத்திஞர். எனினும் அதில் அவர் தோல்வியடைந்து விட்டார்.

புதிய ஜனதிபதியும் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்பதாக முதலில் இருந்தது பின்னர் சோதிடர்களின் கூற்றுப்படி சனிக்கிழமை பதவியேற்ருர், அது போல் அவரது புதிய அமைச்சரவையும் நேற்று பதவியேற்பதாக இருந்தது. ஆனுல் கிரகங்களின் சேர்க்கை உகந்ததாக இல்லாத படியால் அது இன்று நடைபெறுகிறது. இன்று காலை 6-00 மணிக்கு புதிய அமைச்சரவை பதவியேற்கவுள்ளது. [சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B;